
www.padippakam.com

# அருவி

## புண்ணுக்குக் கத்தி!



உலகினைப் புரட்டிப்போர்
புதுவாழ்வு படைத்திட
எழுதுகோல் இங்கோர்
நெம்புகோல் ஆகட்டும் !



தம் நகத்தால்
முகத்தைப் பிராண்டி
குருதியிறைக்கும்
விசித்திர விளையாட்டு.......

புண்ணாக்குத் தின்னும்
வேங்கையின் கண்காட்சி

வறண்ட தொண்டையை
தணிக்கும் இரத்தக் குடிப்பு

மந்திகள்
கும்மாளம் போட
கிளையில் வாலால்
தொங்கும் வேங்கையின்
வேதனைச் சீற்றம்

பாராட்டிய வல்லரசுகள்
பெட்டிப் பெட்டியாய்
பரிசுப் பொட்டலங்கள்
அனுப்பின


திறந்து பார்த்தபோது
அனைத்தும்
நகவெட்டி உருவில்
தற்காலிகப் பஞ்சுகள்!

தேவராஜன்
ஜாசின்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# அருவி



ஆசிரியர் குழு :

சீ.அருண்
கணபதி கணேசன்
வே.சுந்தரராசு
ஏ.தேவராசன்

மரபுக்கவிதை பொறுப்பு :

பாநெறிப்பாவலர் டாக்டர் டி.வி.ஆர்.

ஆறாவது
சிற்றிதழ்

தொடர்புக்கு :

அருவி
424 TAMAN SRI MAHSAN
72100 BAHAU
NEGERI SEMBILAN
MALAYSIA.

நன்கொடை ம.ரி. 1.50

படிப்பகம்

www.padippakam.com

# அருவி மலர்ந்துள்ளது!

அதன் மலர்ச்சியிலும் வளர்ச்சியிலும் எல்லாருக்கும் பங்கு உண்டு.

படைப்பாளர் முதற்கொண்டு பார்வையாளர்வரையில் எல்லாரும் ஏதோ ஒரு வகையில் உதவியாகவும் ஊக்கமாகவும் அமைந்துள்ளனர். புதுக்கவிதை, மரபுக்கவிதை இவற்றின் ஒப்பீட்டாய்வு பரவலாக்கப்பட்டிருக்கின்றது. மரபுக்கவிதையின் தனித்துவம் புதுக்கவிதையில் இல்லை. புதுக்கவிதையின் சொல் வீச்சு மரபுக்கவிதையில் இல்லை என்ற குற்றச்சாட்டு பெறுகிவருகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டியதும் தவிர்க்க வேண்டியதும் நம் கடமை. இரு வேறுபட்ட இலக்கியத் துறையை ஒருமுகப்படுத்தி ஒப்பீட்டாய்வு செய்வது தவறாகும்.

மரபுக் கவிதை தனியொரு இலக்கியக்கூறு, புதுக்கவிதை தனியொரு இலக்கியப் படைப்பு. ஒரு மரபுக்கவிதையோடு பிறிதொரு மரபுக்கவிதையை ஒப்பிட்டுச் சொல்லலாம். அதுபோலவே புதுக்கவிதைகளும். நெடுங்கதை வேறு சிறுகதை வேறல்லவா. நெடுங்கதையோடு சிறுகதையை ஒப்பீடு செய்ய இயலுமா. செய்வது முறையா?

இருவேறு நிலையில் இரண்டும் தனித்துவம் கொண்டு விளங்குகின்றன. மரபுக்கவிஞரும் புதுக்கவிஞரும் இதனைப் புரிந்து படைப்பினைச் செய்திட வேண்டும். நான் பெரியவன் நீ சிறியவன் என்ற சமூகவியல் பாகுபாட்டை படைப்பிலும் கொண்டு வருவது தகுமா?

இவ்விரண்டு படைப்புகளையும் படைப்பாளர்களையும் ஒரு சேர கைகொடுக்க வைப்பது அருவியின் ஆவலாகும். முயன்று வருகின்றோம். முடியும் என்ற நம்பிக்கை உண்டு.
ஒரு சமூகப் போராட்டம் வெற்றியடைய இருவேறு கத்திகள் தீட்டப்படுவதில் மகிழ்ச்சியே!

அன்புடன்
ஆசிரியர் குழுவினர்.

படிப்பகம்

www.padippakam.com

# சின்ன சின்ன முகங்கள்

பறைைக்கும் தமிழனுக்கும் போட்டி
வென்றான் தமிழன்
நாடுவிட்டு நாடு பறப்பதில்!

உலகெல்லாம் ஏற்றம்...
முன்னேற்றம்
மக்களை அகதியாக்குவதில்!

பன்னீரில்
குளிக்க வந்தோம்
கண்ணீரில் குளிக்கின்றோம்!

தினம் மலரும் மலர்
தேன் குடிக்கும் வண்டு
மறுகணம்..... மறுமலர்
நன்றி சிரிக்கும்

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்

படிப்பகம்

www.padippakam.com

## நெகிழ வந்த மடல்!

அன்புமிகு அருவி ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்.

கடந்த ஒரு மாதமாக நான் அருவி வெளிவரவில்லை.
என் மனதில் கவலை படர்ந்துள்ளது. அருவி ஒழுக்கம்
போல் தொடர்ந்து வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.
உங்கள் கவிதை வரிகளே - உங்களுக்கு நம்பிக்கை
ஏற்படுத்தும் என நம்புகின்றேன்.

பல இன்னல்களுக்கிடையே அருவி வெளிவருகின்றது என்பதை
அறிவேன். அதற்காக என்னால் - எங்களால் இயன்ற
ஒத்தாசையும் உதவியும் நல்குவேன் - நல்குவோம்!

தொடர்ந்து அருவி வர வேண்டும். கவிதை மறுமலர்ச்சியின்
காவலாக அருவி பாய்ந்திட வேண்டும்.

நன்றி, வணக்கம்.

அன்புடன்,

செ. தேவராஜ்

படிப்பகம்

www.padippakam.com

நட்புக்கு வாழ்த்து

அன்புள்ள நண்பர் திரு. சி. அருண் அவர்களுக்கு,

வணக்கம்

இந்நாட்டு கிராமத்தின் ஒரு நதிகளை கடந்த ஒரு வேர்கள் நிறைந்த பொருளில், நினைவுகளை கொட்டுகிறது 'அருவி'.

'படைப்பது ஒரு அர்த்தமுள்ள' என்றும் சொல்ல இங்கே மனிதர்கள் இருக்கின்றார்கள் என்ற உணர்வை வெளிப்படுத்தி தருகின்றது.

நான் பார்த்த 'அகம்' என்ற கலைநய அமைப்பு, பல காலமாகவே ஒரு கலைநய நிகழ்ச்சி தொண்டாற்ற வேண்டும் என எண்ணங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

எங்கோ பார்த்த உண்மையாகவே 'அருவி' தொட்டுவிட்டது.

இசையமைப்பாளர் - ஆனந்தம்தான்!

அற்புதமான நிகழ்வுகளை கண்டு எப்படி ஆனந்தம் கொள்வது இப்படி எழுதும் - ஒரு உண்மையான கலைநய வெற்றிதான்!

நன்றி.


தமிழுக்கும், நண்பர்களுக்கும் சந்திக்க ஆவலுடன்,

மா. அண்ணாமலை

படிப்பகம்

www.padippakam.com

# தவிப்பு



எங்கோ
மரத்தடியில் காத்திருக்கையில்
மாட்டிக் கொண்டதோ
"வைப்பரில்" சிக்கிக்கொண்ட மலர்

கண்களுக்கு வெகு அருகில்தான்
ஆனால்
கைகளுக்கு எட்டவில்லை.

நெடுஞ்சாலை பயணத்தில்
தள்ளாடியது காற்றில்

பறந்துவிடுமோ என
பதைக்கிறது மனம்

இப்பத்தான்..................

கைக்கொள்ள முடியாமல்
தவிக்கிறது
மலரும் வாழ்வும்.

டாக்டர் சண்முகசிவா
கோலாலம்பூர்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# காலை வாரிய மலர்மாலைகள்?

புலிகளின் கோரிக்கைகளெல்லாம்
கோபுரத்தை உரச
தம் எலும்புகளே
படிகளாயின.

பச்சைக் கொடியோடு
திரும்பிவர
படிகள் காணோம்.......

சில வெறிகளின்
தாடைகள்
அவற்றைக்
காட்டுமிராண்டிக் குகைக்குள்
புசித்துக்கொண்டிருந்தன

ஐயகோ!

அந்த நூற்றாண்டு
வேள்விகளெல்லாம்.......

உச்சியிலிருந்து
தொ
    ப
        க்
            க
                டி
                    ர்... ?

தேவராஜன்
ஜாசின்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# கலக்கம்

அவள் புன்னகையில்
அகல் பொன்நகையும் தோற்கும்
கயல் கண்ணசைவில்
காதல் காளைக்கு ஏக்கம்
கோவை செவ்விதழில்
கோதை மதுரசம் தேக்கும்
உறவு விலகியதில்
இரவு ஏதடி தூக்கம்!
இனி எவ்வழியில்
என்று களைவதென் கலக்கம்
கன்னி செந்தமிழில்
கண்ணே கொடுத்திடு விளக்கம்!

சோமதேவன் சோமசன்மா
நெகிரி செம்பிலான்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

## தந்தை பெரியார்

சிலாக்கிய முண்டென்றால் தந்தைபெரி யாரின்
நிஜாவொத்த பொற்கொள்கை நோக்க - கலாச்சாரச்
சாதிபேத மென்றொழிப்புச் செயலாற்றிச் சாதனையால்
சேர்ந்திய மேவுநீதி யாம்

## அறிஞர் அண்ணா

உயர்வாழ் எழுத்தாழ மொன்றே அணியாக ஊற்றெடுத்து
அயராத் தமிழ்காத்து வேற்றுமை தூர்த்திட ஆளுநராய்
துயர்தீர நாட்டி னமச்ச ரகத்து சமத்துவத்தின்
மயலுள் பணியிலே அண்ணா செறிந்த விளையிரே.

## கலைஞர் மு. கருணாநிதி

ஓர்மையில் அண்ணாவி னூகம் பெரியாரின்
வீர்யகரு ணாநிதி வன்கவியால் - பேருலகில்
தீமைய சுற்றிய சீர்திருத்த செம்மெனெ
வாய்மைநினை வாற்ற லுயர்வு

ஓ.பி.எம்.அப்துல் குத்தூச்
மியான்மார்.

படிப்பகம்

www.padippakam.com

## புதிய விடியல்

உண்மைதான்
எல்லாரும் மனிதர்கள் என்றிருந்தேன்

நான்
மனிதனாகியதால்

அனுபவச் சீட்டுகளில்
ஏற்பட்ட கிறுக்கள்களில் புரிந்தது...

நான் மனிதன்
என் முன்னே
நாயோ...
பேயோ...
என்ன "ஜடமோ"

காலச் சூட்டால்
கரைபட்ட நீர்த்திவலையாய்
நான்...

இன்றோடு மட்டுமல்ல
இனி என்றுமே
நான் மட்டுமே
மனிதன்...

சீ. அருண்

படிப்பகம்

www.padippakam.com

# ஜன்னல் பார்வை

மழையில் நனைகிறது நகரம்

இருட்டு வானில்
சுவர் கடிகாரமாய் நிலவு
சோடியம் விளக்குகளின் சோகமஞ்சளில்
மழையின் அடர்த்தி பார்க்கும்
பஸ் ஸ்டாண்ட் மனிதர்கள்

பூக்காரியின்
வாங்குவாரற்ற மல்லிகைப் பூக்கள்
கூடைக்குள்ளேயே பூக்கும்

மழைக்குப் பயந்து
குட்டியை வாயில் கவ்விய தாய்ப்பூனை
திறந்த ஜன்னல்களைத்
தேடி அலையும்

வெளிச்சம் பாய்ச்சி வேகமாய்ப் பாயும்
கார்களுக்குள்ளே
ஒப்பனை கனக்கும் முகங்கள்

நதிகளாய் மாறிய
நகரத்தெருக்களில்
கரையும்
அந்த தெரு ஓர ஓவியனின்
கரித்தூளும் கோலப்பொடியும்

இந்திரன்
தமிழ்நாடு
(நன்றி - ஆனந்த விகடன்)

படிப்பகம்

www.padippakam.com

# மலர்கள்!

மலர்களில் மணமில்லை!!!
ஆம்
மலர்களில் மணமில்லை

எங்கள் மலர்களைக் கொல்ல
வங்காள மனிதர்கள்

எங்களின் மலர்களில்
மணமிருந்தது
இன்று மணமில்லை!

மொட்டுகளில்
அமர்ந்து வண்டுகள்
அதன் கால்களில் மலம்!

ஓ! எங்களது அனாதை மனிதர்களே
அப்பாவித் தேடலில்
அழுக்குப்பட்ட பிள்ளைகள்
இன்று
நீ யார் மகன்!
தமிழன்
வங்காளி

பி. லெட்சுமணன்
ஜோகூர் பாரு.

படிப்பகம்

www.padippakam.com

மயில்வாகனின் இரு கவிதைகள்.

## ஓரவிழிப்பார்வை!

வெட்டு...
கிழி...
பிழி...
அதற்குத் தானே
நானும்...
உன் உடலும் !

நான் ...
நானாகவும்
இந்த உலகமாகவும் !
நீ...
நீயாகவும்
இந்த உலகமாகவும் !

இருவருமாய்
வெட்டிய
கிழிந்த
பிழிந்த
உன்னையும்
என்னையும்
இந்த உலகத்தையும் ஏந்தியபடி !

படிப்பகம்

www.padippakam.com



# நிறைமதி

உனது வதனமும்
உனது ஓரவிழிப்பார்வையும்
அதில் ஒளிரும் ஈர்ப்பும்
மின் கீறல்கள்
விண்வெளியையே கிழித்து விரவிச்
செல்லும் வைர வரிகள்!

வெறுமனே கிடந்த என் இதயத்தில்
கொப்பளித்தெழும் ஆசைகளை
கிளர்ந்தெழ வைத்தாய்
பல காததூரம் சென்று நயனங்களைச் சிமிட்டி
மயக்கும் புன்முறுவலைக் காட்டி
உலகையே அடகுவைக்கிறாய் !

ஒரு முறை பிறந்து
ஒரு முறை வாழ்ந்து
ஒரு முறை மரிக்கும்

மனித வாழ்க்கையில்
ஏன் இவ்வளவு பெரிய
இடைவெளியை உண்டாக்கி
இன்பம் காண்கிறது இயற்கை!
எதுவரினும் ஏற்பேன் என் பக்கம் நீ இருந்தால்
உரம் கொண்ட இதயத்தோடு
நீ மிளிர வேண்டும்
ஏனெனில்
நீ தான் என்
நிறைமதி.

படிப்பகம்

www.padippakam.com

# எல்லாம் எதற்காக?

சோராமல் எண்ணத்தைக் கொட்டித் தீர்த்து
சொல்லாக்கிக் கண்ணிக்குள் கட்டிப் போட்டு
மாறாத சமுதாயம் பிறிதோர் நாளில்
மாறத்தான் வகைசெய்வேன் என்று கூறி
மார்த்தட்டிக் கொள்கின்ற நோக்கில் இந்த
மாச்சேவை செய்கின்றேன்? இல்லை! இல்லை!

போராடிப் புகழ்வேண்டிப் பொழுதை மாய்த்து
பேராசைக் கூடலாடித் தேகம் தோய்த்து
யார்யாரும் புகலாத புதையல் ஒன்றை
யாத்தின்று கவியாக்கும் வியூகம் கொண்டு
தார்சேர்ந்த நாராகி வாசம் வீசும்
தீராத ஆசைக்கா? இல்லை! இல்லை!

கோராத கோரிக்கை என்ற போதும்
குறிஞ்சிப்பூ பூத்தாற்போல் வந்து சேரும்
பாராட்டைப் பணமுடிப்பைக் கருத்தில் வைத்து
பலவந்த முயற்சிக்காய் எழுத்தை மொய்த்து
பேராற்றல் காட்டித்தான் பரிண மிக்கும்
பூரிப்பா? பெருமிதமா? இல்லை! இல்லை!

சீரான சொல்லாக்க கவிதை யாத்து
தடுமாற்றம் தந்தாலும் 'மரபைக்' காத்து
தாராள மனப்பான்மை 'உரைவீச் சோடு'
சேராமல் கவியரசர் எந்தை போக்கில்
வாரிசாய் உருவாகும் தூர நோக்கில்
விளைந்ததா எழுத்தாற்றல்? இல்லை! இல்லை!

நூறாக அர்த்தங்கள் தோற்றம் பெற்று
நானாகக் கூறாமல் காணக் கூடும்
வேறொன்றில் வாய்க்காத இன்பம் பூத்து
வார்த்தைக்குள் தேங்காத துன்பம் தூர்க்கும்
பேருந்தாய் அருங்கவிதை திகழ்வ தாலே
பேரின்பம் யானெய்த வடிக்கின் றேனே!

வாஞ்சிதேவன் சோமசன்மா.
மலேசியா

படிப்பகம்

www.padippakam.com

# உதயமாச்சு தமிழீழம்

உதயமாகும் தமிழீழம்! இல்லை; இல்லை!
உதயமாச்சு தமிழீழம் என்றோ! இஃதை
இதயமில்லா ரேமறுப்பார்! வரலா றின்றி
இங்குமங்கும் அலைந்திடுவா ரேம றுப்பார்.....!

சிங்களவன் வரும்முன்பே தமிழி னத்தான்
திருவாழ்வு அவனுற்றான்! இதற்கா தாரம்
எங்களது எனக்கேட்டான் வரலாற் றைத்தான்
இம்மியளவும் அறிந்திடாத மூட னாமே.....!

தமிழருக்கே உரிமையாகத் திகழ்ந்த ஈழம்
தரம்பார்த்து சிங்களவர் திறமை யோடு
தமதென்றே அபகரிக்கத் திருட்டு கண்டு
தமிழ்நெஞ்சம் குமுறாமல் இருக்கு மாமோ...?

படைபலத்தால் பொய்பலத்தால் தமிழி னத்தைப்
பாரினிலே அழித்திடலாம் என்று நாளும்
படைநடத்தும் நரிக்கூட்ட வேட்கை கண்டு
படபடத்து நடுங்குமாமோ புலிகள் கூட்டம்.....

வெடிக்கின்ற வேட்டெல்லாம் வேட்டே என்று
விளம்பிடாதே தமிழ்மகனே! ஈழ மண்ணில்
வெடிக்கின்ற தன்மான வேட்டே யிந்த
விரியுலகப் பொய்நொறுக்கும் வேட்டாம் ஓங்க....!

பொங்குதமி ழர்க்கின்னல் நேரக் கண்டால்
சங்காரம் நிசமென்று சங்கின் மூலம்
மங்காத எச்சரிக்கை உலகி னுக்கே
வழங்கிட்ட பாரதிதா சன்பாட் டோசை.

எங்கெங்கு வாழும்எம் எதிரி காதில்
எட்டுவதால் அவரெம்மைப் பகைப்ப தில்லை!
சிங்களத்துச் சகோதரியின் காதி லிந்த
திடவோசை தீட்டவையோ, அதிச யந்தான்....!

ம.அ. சந்திரன்
தாசேக் குளுகோர்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com




நடமாடும்
மனித தெய்வங்கள்...

உனக்கும்
எனக்குமாய்
வழிகாட்டும் விளக்குகள்...

வேத பாடல்களில்
காணத் துடிக்கும் மனம்
இறைவனை...

எல்லோரும் சேர்ந்து
சிரிக்கும்...

மனிதர்களை நோக்கி...

வெ.தேவராசுலு
பினாங்கு
மலேசியா.

www.padippakam.com

# கவிஞர் சுந்தவனம்.......

நேரம் பெரிது நேரத்தை விட்டார்
சேரும் பதவியைச் சிறப்பினை விட்டார்.

அள்ளிக் கொடுக்க ஆசைதான் ஆனால்
உள்ள இல்லை ஓடேந்துப் பின்னால்.

தந்தையைக் கொன்று தனிவீ டமைக்கும்
சிந்தனை சிறிதும் எந்தனுக் கில்லை.

புவிமகள் அழகில் பூரித்து நிற்பார்
கவலைகள் அற்றார் சுயமையும் அற்றார்.

கற்றவர் கருத்தைக் காதில் விழுத்து
மற்றவர் சொல்லை வாதில் கொளுத்து.

பாய்ந்தால் பாயும் பதுங்கிய பூனை
சாய்ந்தால் சாயும் சறுக்கிய யானை.

பயிற்சி செய்தால் பழக்கம் ஊன்றும்
முயற்சி செய்தால் முடிக்கத் தோன்றும்.

நன்றி
- மண் -
சேர்மனி

படிப்பகம்

www.padippakam.com

# ஒழுகல் அன்பு

திருமதி கா. கமலாதேவி
ஜோகூர்பாரு.

கைகளுக்குப் பகையான
நாங்கள்!

கண்களைக் குத்திய
இமைகள்!

ஒழுகல் அன்பில்
வெந்துப்போன நட்பு!

அன்பு
மலைச்சருகலில்
காயப்போட்ட பிணமாய்!

பொல்லாத நண்பனில்
புதைந்துக் கிடக்கும்
மிருகச சிந்தனை!

இனியும் வேண்டும்
அன்பு.....
வாழ்வதற்கு
வாழ்க்கைக்கு!

படிப்பகம்

www.padippakam.com

# பெரும்புள்ளிகள் உணர்வார்களா?

தமிழ்ப்பள்ளிக்கு
அனுப்பமாட்டோம்

ஒரு வீர உணர்வில்
மழுங்கும் கத்திகள்

பெரும்புள்ளிகள்
போர்த்தி ஏமாற்றும்
வண்ணத் தோல்கள்

இனி வேண்டாம்
தமிழ்

நாம் தமிழ் தெரியாத
தமிழர்களாவோம்

நம் கைகள் சேரட்டும்
மனமும்தான்

இனி பிள்ளைகளை
தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புவோம்.

டி. பால்
கோத்தா திங்கி

## பட்டம்

கண்ட கண்ட இடங்களில்
பட்டம் விடக் கூடாது
கண்ட கண்ட நபர்களுக்கும்
பட்டம் கொடுக்கக் கூடாது
பட்டம் பறக்க காற்று தேவை
பட்டம் கிடைக்க ஆற்றல் தேவை!

படிப்பகம்

www.padippakam.com




கவிதையே இலக்கியப் படைப்பின் தலைமையானது. எல்லா மொழிகளிலும் கவிதையே முதல் இலக்கியமாக உருப்பெற்றுள்ளது. மனிதனின் நுகர்வுத் திறனும் கவிதையையே முன் வைக்கிறது. எல்ல மனிதர்களும் ஏதோ ஒரு கவிதையையோ, ஒரு பாடலையோ நினைவில் கொள்வதற்குத் தயங்குவதில்லை.

கவிதை - மொழியின் அழகு
கவிதை - மொழியின் உறுப்பு
கவிதை - மனிதனின் உணர்வு
கவிதை - உணர்வின் உயிர்மை என்று பல்வேறு நிலைகளில் போற்றப்படும் கவிதைக்கு ஆழமான அகலமான களம் ஏற்படவில்லை என்பதே உண்மையாகும்.

இதனை உணர்ந்தே - உணர்த்தவே மலேசிய நாட்டிலிருந்து அருவி வெளியிடப்படுகின்றது.

தமிழ் நாட்டிலிருந்து பெரியவர் ஆடற்கோ அவர்கள் 'தேனாறு' என்ற கவிதைத் திங்களிதழை வெளியிட்டு வருகின்றார். தரமான கவிதைகளை தங்கத் தேரில் சுமந்து தரும் பணியை தேனாறு செய்கின்றது.

ஏடு முழுக்க கவிதையுமாய் கவிச்சிந்தனையுமாய் பரவிக்கிடக்கின்றது. நல்லதோர் கவிதையிதழை வாசித்த சுவாசித்த மனநிறைவு ஏற்படுகின்றது. கவிதையின் வளர்ச்சியை முன்வைத்தே முன்னுரையாக்கப்படும் தேனாறு உயிர்க்கும் வாழும் கவிஞர்களை மனநிறைவுபடுத்தும்.

ஓர் இலக்கிய படைப்பாளனின் தாகம் தீர்க்கப்பட படைக்கப்படும் படைப்பு எல்லா சமூக சிந்தனைவாதிகளையும் உயிர்ப்பைப்படுத்தும் என்பதே இலக்கியத்தின் சாட்சியாகும். தேனாறு இதனை ஈடுசெய்கின்றது. வாழ்க ஆடற்கோ; வளர்க தேனாறு.

சி. அருணா

படிப்பகம்

www.padippakam.com




கவிதைத் திங்கள் இதழ்...

ஆசிரியர் : ஆடற்கோ

# தமிழ் உலகை ஆளும்!

- ஆடற்கோ

1. பிறந்தபொன் னாளை அறிந்திட இயலாப்
   பெருமைக் குரியவளே!
   பேசா மாவிட நாவை முதன்முதல்
   அசைத்த பெரியவளே!
   சிறந்தனை என்ற பொறாமை சினாற்கடல்
   சீறக் கடந்தவளே!
   சித்தர் மனத்தி லிவித்துத்! தழைத்துச்
   செழித்து நடந்தவளே!
   துறந்தன மென்று கிடந்தவர் நெஞ்சம்
   கரந்து வழிந்தவளே!
   தொன்மைய ளேதவித் தன்மைய ளேஎனைத்
   தொட்ட தமிழ்மகளே!
   இறந்தன கோடி யுகங்கள் எனினும்
   என்றும் இளமையடி!
   எங்கட் கொருபுகழ் உண்டெனில் அதுநீ
   ஈந்த புலமையடி!

2. அன்பில், இரண்டுயிர் இன்புற வில்இவை
   அன்றிலை வென்றுவிட
   ஆடவர் பெண்டிர்க்(கு) இடைப்பொது கற்பென
   ஆக்கிய வாழ்வடி நீ!
   சென்றன ரோம்மை மொன்றிய ரிவ்வழி
   செப்புக எனவிவை,
   சிங்க இளைஞனைக் கண்டேன் பக்கலில்
   சென்றவர் தமையறிவாள்
   நன்றிவள் என்றுடன் வந்தவ ளைச்சொல
   வைத்தனன் ஒருகாளை!
   நயம்படக் காதல் களவியல் கூறகத்
   திருக்கோவைக் கவிதை

   ஒன்றில் தமிழ்க்குலக் கற்பு தெறிக்கெழில்
   உவமை வழங்கிய நீ
   ஒப்பிணை யற்ற தமிழ்ப்பெரு மாட்டி.
   உயர்பண் பாட்டரசி!

3. மாசறு பொன்னே வலம்புரி முத்தே -
   மலைப்பிற வாமணியே
   மகிழ்ந்தே வேகரும் பேவெனக் கண்ணகி
   மயங்க உரைத்தானே
   ஆசையிற் கோவலன் அமுதக் கவிதையில்,
   அந்த வரிகளில் நீ
   ஆயிரம் காலம் ஆனபின் னாலும்
   அழகு நடந்தருவாய்!
   காசறு கணவன் கள்வ னெனக்கொலைக்
   களத்தில் விழுந்துபட
   கையிற் சிலம்பொடு கண்ணில் நெருப்பொடு
   கலங்கிய பாண்டியன் முன்
   வீசிய சொற்களில் வெங்கனற் கற்களில்
   வீரம் புரிந்தவள் நீ!
   வேசியர் குலத்துப் பிறந்தன ளேனும்
   மேன்மகள் மாதவியின்

4. வாசல் மிதித்தவன் மாறிய போதினில்
   வழங்கிய கானல்வரி
   சைவ திருமுறை மாண்பைப் புகுத்திய
   வையம் புகழ்ந்தநெறி!
   பேசு திருக்குறள் ஆகிய முக்கனிப்
   பிழிவில் இனிப்பவளே!
   பேரரு ளாமிறைப் பெற்றி புரைதிரு
   வாசக நற்றேனில்,
   கோசல நம்பி இராமனைக் கம்பர்
   கொடுத்த விருத்தமதில்,
   கொக்குகக் குக்குவற் கொக்கக் குதித்திடு
   கோலத் திருப்புகழில்,

   ஆசறு வள்ளல் இராமலிங் கன்மனம்
   அள்ளும் அருட்பாவில்
   அஞ்சாப் பாரதி, பாரதி தாசன்
   அகத்தில் நிலைத்தவளே!

5. தொன்று புறம்அகம் என்று வகுத்துத்
   தொகுத்த துறைக்குள்ளே!
   சொல்லும் அறம்பொருள் இன்ப மெனும் நெறி
   தோற்றிய பேரறிவே!
   வென்று சிதைத்திட நின்று களைத்தன
   மேன்மை இலாதசில!
   விரித்த வலைக்குள் சிக்கி யழிந்தன
   மீண்டும் எழாதநிலை!
   என்று மெதற்கு மிளைத்தறி யாத
   இயல்பின ளேதமிழே!
   எப்படி யோஒரு கைப்பிடி யில் இடை
   எட்டிப் பிடித்தபடி
   மன்றினி லுன்னை மயங்கிட வைத்தனன்
   ஆங்கில மெனுங்காளை!
   மயங்கி விழுந்தனை இன்னு மெழுந்திட
   மனமிலை யோமகளே!

6. தந்நல வேட்கையிற் போர்க்கொடி யேந்திச்
   தருக்கிடும் இவ்வுலகத்
   தனித்தனி நாடுகள் அனைத்தும் ஒருநாள்
   தழுவிக் கரங்கோத்து
   மன்னு முயிர்க்குலம் உய்யும் நெறிசொலே
   மாபெரும் கொள்கையதாய்
   வல்லர சொன்றை யமைத்திடு மப்பொழு(து)
   அப்பெரும் அரசவையிற்(கு)!
   என்ன மொழித்தகு திப்பெறும் என்றவர்
   எண்ணி யமர்ந்தாய்ந்தே
   எப்பெரு மொழியும் இதற்கிணை யிலையென
   எடுப்பர் உனைத்தேர்ந்து!

   தன்னிக ரற்ற தமிழ்த்தா யேநீ
   தாரணி ஆள்வாயே!
   தத்தை யெனத்துதி தத்தி யுரைத்தடி
   தாழ்ந்து வணங்குகிறேன்!!



படிப்பகம்

www.padippakam.com



# இரங்கற்பா போதும்!



இறந்த காலத்
தலைவர்களின்
நினைவுகளுக்கு
எழுத்துப் படையலிடு
எழுத்தாளர்களே!

கடந்த காலப்
பெருமைகளின்
பூரிப்பில்
புதைந்து
கிடப்பவர்களே!

முடிந்த கால
முடிவுரைகளுக்கு
இன்னும்
முன்னுரையை
முன்மொழிபவர்களே

உங்கள்
எழுதுகோல்களில்
எப்பொழுதும்
கண்ணீர்த்
திவலைகளா?

அழுவதற்கே
அவையாவும்
அவதாரமா?

அவர்கள்
வாழ்வது
மண்ணின்மேல்தான்
மறுக்கவில்லை

படிப்பகம்

www.padippakam.com

அதற்காக –
இந்த மண்ணிலே வாழ
வாழ்க்கையோடு
வழக்காடும்
வருங்காலத் தலைவர்களை
நிராகரிப்பது நீதியாகுமா?

இறந்தகாலத் தலைவர்களோடு
நின்றுவிடாதீர்கள்!
வருங்காலத் தலைவர்கள் பக்கம்
கொஞ்சம் வாருங்கள்!

காய்ந்து உதிர்ந்த
சருகுகளுக்கு
இரங்கற்பா போதுமே!
புதிய தளிர்களுக்கு
வாழ்த்துப்பா வாசியுங்கள்!

உங்கள் எழுதுகோல்கள்
கண்ணீர் சிந்தியது போதும்
வாடிய பயிர்களுக்குத்
தண்ணீர் தானம்
தரமுடியுமா பாருங்கள்!

நம் அவசரத் தேவை–
கண்ணீர்க் காவியங்கள் அல்ல
உத்வேக உணர்வுகளை
கெப்சியூலாகப்
பொட்டலம் கட்டித்தரும்
பொக்கிஷங்கள்

படிப்பகம்

www.padippakam.com

இளைய நெஞ்சங்களின்
இதயக் கதவுகளை
உடைத்துத் திறக்கும்
உக்கிரத்தைத் தமக்குள்ளே
பதியம் போட்டிருக்கும்
படைப்புக்கள்!

அடுத்த நூற்றாண்டுக்கு
ஆற்றுப்படுத்துகின்ற
ஆரவாரமில்லாத
அக்கினித் தெறிப்புக்கள்!

இறந்தகாலத் தலைவர்களின்
நினைவுகளுக்கு
எழுத்துப் படையலும்
எழுத்தாளர்களே!

புறப்படுங்கள்!
போர்க்கால அவசரத்தோடு
புறப்படுங்கள்!

அருமெச்சி எழுதுகோல்களை
அமைதிப்படுத்துங்கள்
இனி—
இரத்த தானத்திற்கு
அவற்றைத்
தயார்ப்படுத்துங்கள்!

— ந. பச்சைபாலன்

○○○

படிப்பகம்

www.padippakam.com

# ஜேர்மனி 'இளைஞன்' இதழ் நடாத்தும் மாபெரும் கவிதைப்போட்டி!

உலகுவாழ் ஈழத்தமிழ்
எழுத்தாளர்களே!
கவிஞர்களே!
இதோ உங்கள்
திறமைக்கு
ஓர் பரீட்சை.




இங்கே காணப்படும் ஓவியத்திற்கு பொருத்தமாக, உங்கள் கற்பனைக் குதிரையை தட்டிவிட்டு 1 -15 வரிகளுக்குள் அடங்கக்கூடியதாக ஓர் கவிதை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்.

முதல் மூன்று பெறுமதிமிக்க பரிசுக்குரிய கவிதைகளையும் உணர்ச்சிகவிஞர். காசிஆனந்தன் அவர்களே தேர்ந்தெடுக்க [illegible]ளார்.

முடிவு திகதி: 01. 09. 1997 க்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.


முகவரி:
"ELAIGNAN"
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY.
Tel & Fax: 069/ 70 44 39


படிப்பகம்

www.padippakam.com

# சிந்தாத கண்ணீர்

நிழலுக்கு ஆலும்
நீருக்கு தென்னையும்
கூளுக்கு பனையும்

கட்டைக்கு பூவரசும்
கறிக்கு முருங்கையும்
கஞ்சிக்கு அரிசியும்
பாலுக்கு பசுவுமாய்

வாழ்ந்த தாய்மண்ணில்
இன்று
நினைவுகளின் நிழல் தனியாய்!

அகதி அட்டையும்
அன்னியக் கடப்பிதழும்
வாடகை வீடும்
வங்கிக்கடனுமாய்
நாங்கள் அகதிகள்.....
என்றென்றும் அகதிகளாய்!

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்

படிப்பகம்

www.padippakam.com

# நான் ஊமையாய்...

— நன்றி — செம்மலர்



○ கருப் பைக்குள்
கருத்தரித்துக் குழந்தையாகப்
பூமியில் விழுந்த போது
உலகம் எனக்கு
உன்னதமாய்த் தெரிந்தது

○ நான் வளர்க்கப்பட்ட போதும்
மனிதனாக்கப்படுவேன்
என்ற நம்பிக்கையோடு
வளர்ந்தேன்

○ இவர்களோ,
கூடவே என்னோடு
என் உள்ளத்தில் வளர்த்தார்கள்
ரத்தமும் சதையுமாக
ஜாதியும், மதமும்
சார்ந்த உணர்வுகளை.
நான் மங்கிப்போனேன்

○ ஒரே வீதியில்
விளையாடித் திரிந்து
நான் நேசித்த
என் நண்பர்கள்
நேற்று நடந்த
ஜாதிக் கலவரத்தில்
அந்நியனாய்
என் முன்னே
வெட்டுண்டு கிடந்தார்கள்
நான் ஊமையாகிப்போனேன்

○ ஆகாயக் கூரையின்
அடிவாரக் குடியலுக்குள்
எங்கள் மனிதர்கள்
இன்னும்
ஜாதியும், மதமும் பேசிக்கொண்டு...

- எஸ்.சி.ஸ்டாலின் தாஸ்

படிப்பகம்

www.padippakam.com

## போட்டி

கீழே காணப்படும் ஓவியத்திற்கு
ஏற்ற கவிதையை எழுதிடுங்கள்!
சிறந்த கவிதைக்கு பரிசில்
உண்டு



படிப்பகம்

www.padippakam.com

# மலேசியத் தமிழ்ப் பாவலர் மன்றம்

எண்: 33, ஜாலான் SJ 21, தாமான் செலாயாங் ஜெயா,
68100 சிலாங்கூர் டாருள் ஏசான்.

**PERSATUAN PENYAJAK TAMIL MALAYSIA**
**MALAYSIAN TAMIL POETS ASSOCIATION**

## உறுப்பினர் படிவம்

**REG:4707/90**

உறுப்பினர் எண். ............

பேரன்புக்கெழுமீர்!

கீழே கையொப்பமிட்டுள்ள நான் "மலேசியத் தமிழ்ப்" பாவலர் மன்றத்தில் உறுப்பியம் பெற இப்படிவத்தின் மூலம் மனுச் செய்து கொள்வதுடன் மன்ற விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

உறுப்பினர்/கௌரவ உறுப்பினர்

பெயர் .................................................... புனைப்பெயர் ....................................................

அ.கா. எண். .................... குடியுரிமை எண். ........................ பிறந்த நாள் ..........................

அகவை .................................................... தொழில் ....................................................

இல்ல முகவரி ........................................................................................................

.................................................... தொலைபேசி எண் ..............................................

........................................................................................................................

அலுவலக முகவரி .................................................... தொலைபேசி எண் ..............................................

........................................................................................................................

கவிதைத் துறையில் எழுத ஈடுபட்ட ஆண்டு ........................................................................

வேறு எழுத்துத் துறைகள் ........................................................................................

உறுப்பியம் பெறுவதன் நோக்கம் ................................................................................

இத்துடன் நுழைவுக் கட்டணம் $5-ம் ஆண்டு உறுப்பினர்க் கட்டணம் $12-ம் ஆக மொத்தம் $17.00 இணைத்துள்ளேன். ஆயுள் உறுப்பினர் கட்டணம் $ 201.00

நன்றி!

தேதி ..............................

இக்கண்

.......... ..............................

## செயலவை நடவடிக்கைக்கு மட்டும்

செயலவை கூட்டம் நடைபெற்ற நாள் ..............................

முன் மொழிந்தவர் .................................... கையெழுத்து ....................................

வழி மொழிந்தவர் .................................... கையெழுத்து ....................................


ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை

..............................
(தலைவர்)

..............................
(செயலாளர்)

படிப்பகம்

www.padippakam.com



# ஹைக்கூ நதிக்கரையில்



* Hujan membasahi bumi
kubernasib baik
tidak berpayung

● பெய்யத் தொடங்கியது மழை
நல்ல வேளை
குடை இல்லை

* Syyh....jangan bersuara lantang
lihat di sekelilingmu
rama-rama

● உரக்கப் பேசாதீர்கள்
ஆங்காங்கே பாருங்கள்
வண்ணத்துப்பூச்சிகள்

* Hujan mulai reda
kunantikan irama merdu
di manakah katak?

● மழை ஓய்ந்தது
இசைக்குக் காத்திருந்தேன்
எங்கே தவளை?

* selautan bunga
seribu kawan
suatu pengebumian

● மலர்கள் குவிந்தன
நண்பர்கள் கூடினார்கள்
ஒரு சவ ஊர்வலம்.

* Kami berebut-rebut
kulihat mereka berbaris lurus
semut

● முண்டியடிக்கும் மனிதர்கள்
எதிர்ச்சுவரில் வரிசையாய்
எறும்புகள்

*N. PATCHAIBALAN*

— ந. பச்சைபாலன் ooo

படிப்பகம்